**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்**

முன்னிலை. **திரு.கா.நிலவரசன்,** B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 13–ம் நாள் திங்கட்கிழமை

**கு.ப.ம.எண்.1266/2025 இல் கு.வ.எண். 4/2025**

*************** – மனுதாரர்/மனுதாரர்

–எதிராக–

1. **********************,

2. ********************* – எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்

இம்மனு கடந்த 10.09.2025 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.M.பாலசுப்பிரமணியன்** அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.A.சசிவேல்** அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் தாக்கல் செய்யப்பட்ட மனு, எதிருரை மற்றும் ஆவணங்களை பரிசீலித்தும், வாதங்களை கேட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது பிரிவு 17(1 மற்றும் 2) குடும்ப வன்முறையில் இருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டத்தின் கீழ், இம்மனுவின் பிரதான மனு முடியும் வரையில் பங்குரிமை வீட்டில் மனுதாரருக்கு குடியிருப்பு வசதியை ஏற்படுத்தி

கொடுக்க எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிட கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர் தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதத்தில், மனுதாரருக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் இடையே திருமணம் நடைபெற்றதிலிருந்து கடந்த 24.10.2021 முதல் மனுதாரர் எதிர்மனுதாரர்கள் பங்குரிமை வீடான எண். 207, 2வது மாடி, J பிளாக், K.G.எர்த் ஹோம்ஸ், தாழம்பூர் என்ற முகவரியில் தான் எதிர்மனுதாரர்களுடன் வாழ்ந்து வந்ததாகவும், மனுதாரருக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் திருமண பேச்சுவார்த்தையின் போது இரு வீட்டு பெரியோர்கள் முன்னிலையில், 1ம் எதிர்மனுதாரரின் அண்ணனான 2ம் எதிர்மனுதாரரும், அவர்களது அம்மா ஆகியோர் மேற்கண்ட முகவரியில் வாழ்நாள் முழுவதும் அனைவரும் ஒன்றாக வாழப் போவதாக தான் உறுதி அளித்ததாகவும், அதன் அடிப்படையில் மேற்கண்ட பங்குரிமை வீட்டில் மனுதாரர் 1ம் எதிர்மனுதாருடன் ஒன்றாக வாழ்ந்து வந்ததாகவும், மேலும் வீட்டு உபயோகப் பொருட்களையும் பகிர்ந்து உபயோகித்து வந்ததாகவும், இந்நிலையில் கடந்த 08.03.2023 அன்று எதிர்மனுதாரர்கள் மனுதாரரை மேற்கண்ட முகவரியில் இருந்து வலுக்கட்டாயமாக வெளியே அனுப்பிவிட்டதாகவும், ஆனால் 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு எதிராக செங்கல்பட்டு குடும்ப நல நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அ.ம.எண்.421/2023

வழக்கில் மனுதாரர் எதிர்மனுதாருடன் ஒன்றாக சேர்ந்து வாழ விரும்பியதாக தாக்கல் செய்த குறிப்பாணையின் பேரில், நீதிமன்றம் அன்றைய தினமே மனுதாரரும் 1ம் எதிர்மனுதாரரும் ஒன்றாக வாழ வேண்டும் என உத்தரவிட்டதை தொடர்ந்து, 1ம் எதிர்மனுதாரர் கடந்த 18.09.2024 அன்று மேற்கண்ட மனுவை திரும்ப பெற்றுக் கொண்டதாகவும், அதனை தொடர்ந்து மனுதாரர் பங்குரிமை வீட்டிற்கு சென்றதாகவும், ஆனால் எதிர்மனுதாரர்களும் அவரது குடும்பத்தாரும் மனுதாரரை மேற்கண்ட வீட்டில் அனுமதிக்கவில்லை என்றும், எனவே மனுதாரர் வேறு வழியின்றி பாதுகாப்பு அலுவலரிடம் கடந்த 27.12.2024 அன்று மனு அளித்ததாகவும், மனுதாரர் 1ம் எதிர்மனுதாருடன் ஒன்றாக சேர்ந்து வாழ தான் இது நாள் வரையில் விரும்புவதாகவும், ஆனால் 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரிடம் இருந்து விவாகரத்து கோரி இ.தி.அ.ம.எண். 440/2024 என்ற மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், மாறாக மனுதாரர் 1ம் எதிர்மனுதாருடன் சேர்ந்து வாழ்வதற்காக செங்கல்பட்டு குடும்ப நல நீதிமன்றத்தில் அ.ம.எண். 121/2025 என்ற மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும் மேற்கண்ட இரண்டு மனுக்களும் ஒன்றாக விசாரணைக்காக நிலுவையில் உள்ளதாகவும், எனவே திருமணம் நடைபெற்றதிலிருந்து மனுதாரர் எதிர்மனுதாரர்கள் மற்றும் அவரது குடும்பத்தாருடன் மேற்கண்ட முகவரியில் ஒன்றாக வாழ்ந்து வந்ததாலும், 1ம்

எதிர்மனுதாரர் குடும்பத்திற்கு தேவையான செலவுகளையும், 2ம் எதிர்மனுதாரரின் வீட்டுக் கடன் ஆகியவற்றை பங்கிட்டு வருவதாலும், மனுதாரருக்கும் மேற்கண்ட முகவரியில் வாழ உரிமை உள்ளது என்றும், மனுதாரரை எதிர்மனுதாரர்கள் வீட்டை விட்டு வெளியே அனுப்பிவிட்டதால், மனுதாரர் மிகுந்த பொருளாதார சிரமங்களுக்கும், தனியே வாழ்ந்து வருவதால் அவரது வாழ்க்கைக்கு அச்சுறுத்தல் உள்ளதாலும் மேற்கண்ட பங்குரிமை வீட்டில் வாழ எதிர்மனுதாரர்கள் மனுதாரரை அனுமதிக்க வேண்டுமென உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

3. மாறாக எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள வாதத்தில், மனுதாரர் தரப்பில் கூறப்படும் பங்குரிமை வீடு 2ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்றும், அதில் 1ம் எதிர்மனுதாரருக்கு உரிமை இல்லை என்றும், எதிர்மனுதாரர்களின் குடும்ப சொத்து சிங்கப்பெருமாள் கோயில் உள்ளதாகவும், இந்நிலையில் மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருடனும் அவரது குடும்பத்தாருடனும் தொடர்ந்து தகராறில் ஈடுபட்டு வந்த நிலையில், 1ம் எதிர்மனுதாரர் கடந்த 18.03.2023 அன்று 2ம் எதிர்மனுதாரரின் வீட்டிலிருந்து சிங்கப்பெருமாள் கோவிலில் உள்ள அவரது குடும்பத்திற்கு சொந்தமான

வீட்டிற்கு செல்ல தீர்மானித்து, 2ம் எதிர்மனுதாரரின் வீட்டிலிருந்து வெளியேற தயாராகியதாகவும் ஆனால் மனுதாரர் அதற்கு மறுப்பு தெரிவித்து, 2ம் எதிர்மனுதாரரின் வீட்டிலேயே தொடர்ந்து இருக்கப் போவதாக சொல்லி தகராறு செய்ததாகவும் அதன் பேரில் காவல் நிலையத்திலும் இருதரப்பிலும் புகார்கள் கொடுக்கப்பட்டதாகவும், எனவே குறிப்பிடும் மேற்கண்ட வீடானது 2ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்பதால் மேற்கண்ட வீட்டில் தொடர்ந்து வாழ உரிமை கோர முடியாது என்றும் எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிடப்பட்டுள்ளது.

4. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 ஆகிய சான்றாவணங்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.20 ஆகிய சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. இருதரப்பு சான்றாவணங்களும், வாதங்களும் கவனத்துடன் பரிசீலனை செய்யப்பட்டது.

6. மனுதாரர் தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதத்தில், மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் ஆகியோரின் திருமண பேச்சுவார்த்தையின் போதே, மேற்கண்ட

வீட்டில் மனுதாரரும் 1ம் எதிர்மனுதாரரும் குடும்பத்தாருடன் கூட்டு குடும்பமாக வாழ்நாள் முழுவதும் ஒன்றாக வாழப் போவதாக எதிர்மனுதாரர்கள் குடும்பத்தார் தெரிவித்ததாகவும், அதன் பேரில் மனுதாரரும் திருமணம் நடைபெற்ற நாளிலிருந்து எதிர்மனுதாரர்கள் மனுதாரரை வீட்டை விட்டு வெளியே அனுப்பியதாக சொல்லப்படும் 08.03.2023 வரை மேற்கண்ட முகவரியில் 1ம் எதிர்மனுதாருடன் ஒன்றாக சேர்ந்து வாழ்ந்ததாகவும், மேலும் மேற்கண்ட வீட்டின் குடும்ப செலவுகளையும், 2ம் எதிர்மனுதாரரின் வீட்டுக் கடனையும் 1ம் எதிர்மனுதாரர் பங்கிட்டு வந்ததாகவும், எனவே மேற்கண்ட மனுதாரரின் பங்குரிமை வீடு என்பதால், மனுதாரரை மேற்கண்ட வீட்டில் தொடர்ந்து வாழ எதிர்மனுதாரர்கள் அனுமதிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

7. மாறாக எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதத்தில், மேற்கண்ட வீடானது 1ம் எதிர்மனுதாரரின் சகோதரரான 2ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்றும், அதனை அவர் எச்.டி.எப்.சி வங்கியில் கடன் பெற்று வாங்கியதாகவும், அந்த வீடு பங்குரிமை வீடு இல்லை என்றும், எதிர்மனுதாரர்களின் குடும்ப சொத்து சிங்கப்பெருமாள் கோயிலில் உள்ளதாகவும், அங்கு வசிக்க மனுதாரரை 1ம் எதிர்மனுதாரர் அழைத்தபோது அங்கு வர மனுதாரர் மறுத்துவிட்டதாகவும், எனவே மேற்கண்ட காரணங்கள்

அடிப்படையில் இம்மனு நிலைக்கத்தக்கது அல்ல என்பதால், இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதிடப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதத்திற்கு ஆதரவாக, மேற்கண்ட வீட்டின் கிரைய ஆவணம் நகல் மற்றும் வங்கி கடன் நிலுவையில் உள்ளதற்கான சான்றிதழ் நகல் ஆகியவை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8. எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களை பரிசீலனை செய்ததில், மேற்படி வீடானது 2ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்பது தெரியவருகிறது. மேற்கண்ட சங்கதி மனுதாரர் தரப்பில் மறுக்கப்படவில்லை. ஆனால் மனுதாரர் தரப்பு வாதம் யாதெனில், திருமணம் நடைபெற்ற நாளிலிருந்து எதிர்மனுதாரர்கள் அவரை வீட்டை விட்டு வெளியே அனுப்பியதாக சொல்லப்படும் நாள் வரையில் மேற்கண்ட வீட்டில், வீட்டு உபயோக பொருட்கள் அனைத்தையும் பங்கிட்டு ஒன்றாக வாழ்ந்து வந்ததாகவும், 1ம் எதிர்மனுதாரரும் வீட்டு செலவுகளையும், வீட்டு கடனையும் 2ம் எதிர்மனுதாரருடன் பங்கிட்டு வந்ததாகவும், எனவே அதில் வசிக்க மனுதாரருக்கு முழு உரிமை உள்ளது என்று வாதிடப்பட்டுள்ளது.

9. இந்நிலையில், மனுதாரர் இம்மனுவில் கோரியுள்ள இடைக்கால

பரிகாரமான மேற்கண்ட வீட்டில் வசிப்பதற்கான உரிமையை இம்மனுவின் பிரதான மனுவிலும் பரிகாரமாக கோரியுள்ளார். எனவே மனுதாரர் குறிப்பிட்டுள்ள படி, மனுதாரரும் 1ம் எதிர்மனுதாரரும் மேற்கண்ட வீட்டில் திருமண உறவின் அடிப்படையில், வீட்டு உபயோகப் பொருட்களை ஒன்றாக பயன்படுத்தி பங்குரிமை வீடு என்ற அடிப்படையில் மேற்கண்ட வீட்டில் வாழ்ந்து வந்தார்களா? அல்லது தற்காலிகமாகவே மேற்கண்ட வீட்டில் இருவரும் வாழ்ந்து வந்தார்களா? என்பது குறித்தும், மனுதாரர் கோருவது போல் மேற்கண்ட வீட்டில் அவர் வாழ்வதற்கு முழு உரிமை உள்ளதா? என்பது குறித்தும் இம்மனுவின் பிரதான மனுவில் இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவனங்களை முழுமையாக பரிசீலனை செய்தால் மட்டுமே அது குறித்து தீர்மானிக்க முடியும்.

10. எனவே இவ்இடைக்கால மனுவில் மேற்கண்ட பரிகாரம் குறித்து தீர்மானிக்க முடியாது என்பதால், மனுதாரர் கோரிய பரிகாரமானது மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. இருப்பினும், 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரின் கணவர் என்ற அடிப்படையில், மனுதாரர் வசிப்பதற்கு தேவையான குடியிருப்பு வசதியை ஏற்படுத்தித் தர வேண்டியது அவரது சட்டபூர்வ கடமையாகும். எனவே மனு சங்கதிகளை பரிசீலனை

செய்ததன் அடிப்படையில், மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் ஆகியோர் ஒன்றாக வாழ்ந்த காலத்தில் அவர்கள் வசித்து வந்த வீட்டின் வசதிகளை ஒத்து, ஒரு வீட்டை 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு உடனடியாக ஏற்ப்படுத்தி தர வேண்டும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**இறுதியாக இம்மனுவை பகுதியாக அனுமதித்து, பங்குரிமை வீட்டில் வசிக்க அனுமதிக்க வேண்டும் என எதிர்மனுதாரர்களுக்கு எதிராக கோரிய பரிகாரத்தை பொறுத்து இம்மனுவை தள்ளுபடி செய்தும், பிரதான மனுவில் உத்தரவு பகரும் வரையில் மனுதாரர் வாழ்வதற்க்கு பங்குரிமை வீட்டை ஒத்த வசதியுடைய வசிப்பிடத்தை 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு ஏற்படுத்தித்தர வேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.**

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்த பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின் (13.07.2026) இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NILAVARASAN KASI

Digitally signed by NILAVARASAN KASI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருப்போரூர்.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் :–</u>** இல்லை

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :–**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 18.09.2024 | கு.நீ.அ.ம.எண்.421/2023 ன் உத்தரவு நகல் |
| ம.சா.ஆ.2 | 28.10.2024 | 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த அ.ம.எண்.440/2024 விவாகரத்து மனு அலுவலக நகல் |
| ம.சா.ஆ.3 | 07.03.2025 | மனுதாரர் தாக்கல் செய்த மணவாழ்வு உரிமைகளை மீட்டெடுப்பதற்கான மனு அலுவலக நகல் |
| ம.சா.ஆ.4 | 02.01.2026 | மாண்பமை மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் உ.சீ.ம.எண்.6695/2025 ன் உத்தரவு நகல் |

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :–** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :–**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 10.03.2021 | 2ம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தின் நகல் |
| எ.ம.சா.ஆ.2 | 14.09.2025 | 2ம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள மின் கட்டண இரசீது நகல் |
| எ.ம.சா.ஆ.3 | 01.06.2025 | 2ம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள சொத்து வரி ஆவணத்தின் நகல் |
| எ.ம.சா.ஆ.4 | 02.10.2025 | 2ம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள வங்கி வீட்டு கடனிற்க்கான சான்றிதழ் நகல் |
| எ.ம.சா.ஆ.5 | 16.07.2021 | 2ம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள வீட்டை கிரையம் கொடுப்பதற்க்கான அழைப்பு கடித நகல் |
| எ.ம.சா.ஆ.6 | – | 2ம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள வீட்டை ஒப்படைத்தற்கான ஆவண நகல் |

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.7 | – | 2ம் எதிர்மனுதாரர் ஆதார் அட்டை நகல் |
| எ.ம.சா.ஆ.8 | – | 2ம் எதிர்மனுதாரர் மனைவியின் பெயரில் உள்ள ஆதார் அட்டை நகல் |
| எ.ம.சா.ஆ.9 | – | 2ம் எதிர்மனுதாரரின் மகன் பிறப்பு சான்றிதழ் நகல் |
| எ.ம.சா.ஆ.10 | – | 1ம் எதிர்மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் |
| எ.ம.சா.ஆ.11 | – | எதிர்மனுதாரர்களின் அம்மா சசிகலா என்பவரின் ஆதார் அடையாள அட்டை நகல் |
| எ.ம.சா.ஆ.12 | | 1ம் எதிர்மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை ஒப்பிட்டு நகல் |
| எ.ம.சா.ஆ.13 | | 1ம் எதிர்மனுதாரரின் மருத்துவ சான்றிதழ் ஒப்பிட்டு நகல் |
| எ.ம.சா.ஆ.14 | | இணைய இணைப்பு ரசீது ஒப்பிட்டு நகல் |
| எ.ம.சா.ஆ.15 | | கு.நீ.அ.ம.எண்.421/2023 ல் 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்யப்பட்ட குறிப்பாணை ஒப்பிட்டு நகல் |
| எ.ம.சா.ஆ.16 | | மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் ஆகியோருக்கிடையே ஏற்ப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒப்பிட்டு நகல் |
| எ.ம.சா.ஆ.17 | | 1ம் எதிர்மனுதாரரின் அம்மா சசிகலா என்பவரின் ஆதார் அடையாள அட்டை ஒப்பிட்டு நகல் |
| எ.ம.சா.ஆ.18 | | 1ம் எதிர்மனுதாரரின் மருத்துவ ரசீதுகள் ஒப்பிட்டு நகல் |
| எ.ம.சா.ஆ.19 | | 1ம் எதிர்மனுதாரரின் அலுவலக அடையாள அட்டை நகல் |

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.20 | | 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் ஒப்பிட்டு நகல் |

NILAVARASAN KASI Digitally signed by NILAVARASAN KASI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்போரூர்.**